2009 பிப்ரவரி 26]

மாண்புமிகு மொடக்குறிச்சி தொகுதி உறுப்பினர் குறிப்பிட்டார். அந்த இடத்திலே கொக்கராயன்பேட்டை பகுதியிலும் ஒரு பாலம் அமையவிருக்கிறது. எனவே, தேவையான அளவிலே இன்னும் ஓராண்டுக் காலத்திலே நாமக்கல் மாவட்டத்தையும், ஈரோடு மாவட்டத்தையும் இணைக்கின்ற வகையிலே ஏராளமான பாலங்கள் அமையவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கோரிக்கையையும் பரிசீலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

பட்டா

***20750—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சி, கொங்கப்பட்டி ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கொங்கப்பட்டியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சி, கொங்கப்பட்டிப் பகுதி, ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும். அதேபோன்று பாப்பாபட்டி, தொட்டப்பநாயக்கனூர் போன்ற பகுதிகள் ஆதி திராவிட மக்களும், அருந்ததியின மக்களும் அதிகம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வசிக்கின்ற பகுதிகளாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்கள் ஒரே குடியிருப்பில் இரண்டு மூன்று குடும்பங்கள் வாழ்கின்ற அவல நிலை இருக்கின்றது. ஏற்கெனவே, நிலம் ஆர்ஜிதம் செய்து கையகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மறுபரிசீலனை செய்து அந்த பாப்பாபட்டி, தொட்டப்பநாயக்கனூர் பகுதி மக்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கொங்கப்பட்டியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, 1998 ஆம் ஆண்டு சர்வே எண் 72/2—ல் 3.68 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மேற்படி நிலம் 105 மனைகள் நேர்வாகப் பிரிக்கப்பட்டு 28—7—1998—ல் 98 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 8 நபர்களுக்கும் தற்சமயம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. அதில் வழங்கப்படவேண்டிய வீட்டுமனைப் பட்டாக்கள் ஏதும் இல்லை. மேலும், இக்கிராமத்தில் வேறு நபர்கள் யாரும் பட்டா வேண்டி மனு செய்யவில்லை. அவ்வாறு மனு வரப்பெறின், நிலம் கையகப்படுத்தப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொங்கப்பட்டி ஊராட்சியில் பட்டா வேண்டி மனு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கின்ற ஆதி திராவிட நலத் துறையினுடைய தனி வட்டாட்சியர் அவர்களிடத்திலே மனு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று பாப்பாபட்டியில் 65 பயனாளிகளால் மனு செய்யப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த இடத்திற்கும் உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதேபோன்று, ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட பட்டா, தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு

2009 பிப்ரவரி 26]

வழங்கப்பட்ட பட்டா இன்னும் ஏட்டளவிலேயே இருக்கின்றது. அங்கு இருக்கின்ற பயனாளிகளுக்கு அந்த இடம் அளவை செய்து உரிய இடம் காண்பிக்கப்படவில்லை. அங்கு இருக்கின்ற வட்டாட்சியர், ஏதோ ஒரு உள்நோக்கம் காரணமாக அந்தப் பயனாளிகளை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறார். இதுபோன்ற அவல நிலைகளைப் போக்குவதற்கு உடனடியாக அரசு தலையிட்டு, அந்தப் பட்டா வேண்டும் பயனாளிகளுக்கு நில அளவை செய்து அவர்களுக்கு உரிய இடம் காண்பிக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாப்பாபட்டியில் வீட்டுமனைப் பட்டா வேண்டும் என்றும், மக்கள் மனு செய்திருக்கிறார்கள் என்றும் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். எங்களிடம் ஏதும் மனுக்கள் வரப்பெறவில்லை. மனுக்கள் வரப்பெற்றால், அங்கு விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், உசிலம்பட்டி தொகுதியில் மட்டும் இந்த மூன்று ஆண்டுகளில் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்று, உசிலம்பட்டி, மேக்கிளார்பட்டியில் 85 நபர்களுக்கு 4.91 இலட்சம் ரூபாயிலும், உசிலம்பட்டி, தும்மளப்பட்டியில் 2007–2008–ல் 93 நபர்களுக்கு 4.53 இலட்சம் ரூபாய் செலவிலும், உசிலம்பட்டி, பாப்பாபட்டியில் 213 நபர்களுக்கு 8.81 இலட்சம் ரூபாய் செலவிலும், போடுவார்பட்டியில் 76 நபர்களுக்கு 5.76 இலட்சம் ரூபாய் செலவிலும், ஆக மொத்தம் உசிலம்பட்டியில் மட்டும் 467 நபர்களுக்கு 24.01 இலட்சம் ரூபாய் செலவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர், வட்டாட்சியர் அவர்கள் ஏதோ உள்நோக்கத்துடன் செயல்படுகிறார் என்று அவர்களாக ஒரு காரணத்தை இங்கே சொல்கின்றார்கள். அந்தமாதிரி எந்த ஒரு காரணமும் இருக்காது. அப்படி இருந்தாலும் உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, மனுக்கள் வரப்பெற்றால் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.